1986 மே 10]

லாபத்தை ஈட்டித்தந்திருக்கிறோம். ஆனால் தற்போது மதுரை கூட்டுறவு சிறப்பு அங்காடி நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை நான் நன்கு அறிவேன். அதனை ஆய்வு செய்து சீர் படுத்த தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியன் சூப்பர் மார்க்கெட் சிறப்பாக செயல்படுவதற்கு நாங்கள் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆற்காட்டில் நகர வங்கி.

738—(*வினா எண் 8973)—திரு. த. பழனி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு நகரத்தில் நகர வங்கி எப்போது ஆரம்பிக்கப் படும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: ஆற்காடு நகரத்தில் புதிய கூட்டுறவு நகர வங்கி அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரிசர்வ் வங்கியின் உரிமம் கிடைத்தவுடன் புதிய வங்கி தனது பணியைத் தொடங்கும்.

திரு. த. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஏற்கனவே எங்களுக்கு இடப்பட்ட பணியை இந்த நகர வங்கியின் சார்பாக முடித்துக் கொடுத்து ஏறக்குறைய 4 மாதங்கள் ஆகியிருக்கின்றன. இன்றுவரை முதல் கூட்டத்திற்கு அவர்கள் ஏற்பாடு செய்யவில்லை. முதல் கூட்டத்திற்கு ஏற்பாடு எப்போது நடைபெறும் என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனி அவர்கள், அரசாங்கம் சொன்னதைவிட அதிகமாக 1½ லட்சத்துக்குபதில், 1 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் வரைக்கும் வசூல் செய்து சிறப்பாக அந்தப் பணியை செய்து இருக்கின்றார்கள். அந்த உணர்வை அரசாங்கம் புரிந்து இருக்கிறது. அதிகாரிகளிடத்திலே சொல்லி 2 மாதங்களுக்குள்ளாக அந்த வங்கியை அங்கே ஆரம்பிக்கவேண்டுமென்ற உத்தரவினையும் சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. அந்த 2 மாத காலம் நீட்டிக்கப்படாமல் அந்த இரண்டு மாத காலத்திற்குள்ளாக ரிசர்வ் வங்கியினுடைய அனுமதி பெற்று ஆற்காடு நகரத்திலே நகர வங்கியை அமைப்பதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளையும் அமைச்சர் அவர்கள் எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேகமான நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியிலே பெண்களுக்காக ஒரு வங்கி ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். அது ஆரம்பிக்கின்ற நிலை இருக்கிறது என்பதை நான் அறிகிறேன். அதை விரைவில் ஆரம்பிக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து நாள் குறிப்பிடுவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கான அந்த தனி வங்கியை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

கு.கா.வி. எண் 13—(*வினா எண் 9251)—திரு. செ. செம்மலை : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போதுள்ள காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பலவற்றில் அதிகாரிகளே தலைவர் பொறுப்புக்களில் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை சங்கங்களில் இருக்கிறார்கள்?

(இ) நிர்வாகப் பொறுப்பை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:

(அ) அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(ஆ) தற்சமயப் தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 507 சங்கங்களில், 120 சங்கங்களில் மட்டும் ஊராட்சி ஒன்றிய ஆணையூர்கள் தலைவர்களாக இருந்து வருகின்றனர்.